# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2491 - 2026 මැයි මස 29 වැනි සිකුරාදා - 2026.05.29**

2491 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2026, யூன் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2026, யூன் மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1 - B82797 - 5403 (2026/05)

# பதவிகள் - வெற்றிடம்

## தென் மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்

பொறுப்பு உத்தியோகத்தர் (இணை உத்தியோகத்தர் சேவைகள் தரம் III) பதவிக்காக வரையறுக்கப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல்

தென் மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் கன்சதேவ சிறுவர் இல்லத்தில் பொறுப்பு உத்தியோகத்தர் பதவிக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள தென் மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01**

**01. ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :**

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள், தென் மாகாண விளையாட்டு அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை குழுவின் முன்னால் திறன் மதிப்பீட்டுத் தகைமை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி, அத்தகைமைகளை மதிப்பீடு செய்யும் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் ஒழுங்கு அடிப்படையில் வெற்றிடம் பூர்த்தி செய்யப்படும். அவ் ஒவ்வொரு பரீட்சையிலும் புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டிய விதம், இவ்வறிவித்தலின் 08 ஆம் இலக்கத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

**02. தேவையான தகைமைகள் :**

கல்வி தகைமைகள் :

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

II. ஆங்கல மொழி அறிவு

(அ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்திற்கு திறமைச் சித்தியினைப் பெற்றிருத்தல்

அல்லது

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் பொது ஆங்கில மொழிப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.

**03. அனுபவங்கள் :**

அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 10/2025 இற்கு ஏற்ப MN1-2025 அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளக் குறியீடு உரித்தான மாகாண அரசாங்க சேவைப் பதவியில் 05 வருடங்களுக்குக் குறையாமல் சுறுசுறுப்பாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் சேவைக் காலத்தினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**04. உடற் தகைமைகள் :**

அனைத்து விண்ணப்பதாரர்களும் தென் மாகாணத்தினுள் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்யவும், பதவியின் கருமங்களை நிறைவேற்றுவதற்கும், சிறுவர்கள் முதியவர்கள் மற்றும் விசேட தேவைகள் உள்ள நபர்களுடன் கருமங்களை மேற்கொள்வதற்கும் போதியளவு உள்ளத்தாலும், உடலினாலும் மதிப்பீடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**05. ஏனைய தகைமைகள் :**

i. விண்ணப்பதாரர்கள்; விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு கிட்டிய மூன்று (03) வருடங்கள் தொடர்ந்து தென் மாகாண சபை அதிகாரப் பிரிவினுள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ள இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். (வதிவிடம் வாக்குரிமை இடாப்பு அட்டவணையில் உறுதிப்பட்டியல் பகுதி மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்).

ii. விண்ணப்பதாரர் விசேட நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

iii. தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இல. 06/2020 இன் ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்று நடவடிக்கைத் தண்டனைகளுக்கு உட்படாதிருத்தல் வேண்டும்.

iv. பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்தமைக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் அறிவித்தலில் / வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்படும் திகதிக்கு அத்தகைமைகள் அனைத்து விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(விண்ணப்பதாரர்களால் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப்படிவங்களுடன் முன்வைத்தல் வேண்டும்).

v. சட்டத்தின் முன் குற்றவாளியாக நிரூபிக்கப்படாத சட்டத்தை மதிக்கும் நபர் என வதிவிடப் பிரதேசத்திற்கு உரித்தான பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் அதிகாரியினால் வழங்கப்பட்ட 03 மாதத்திற்குள் பெற்றுக் கொண்ட பொலிஸ் சான்றிதழ் ஒன்றை ஆட்சேர்ப்புச் செய்யும் நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கு முன் வைத்தல் வேண்டும்.

vi. முன்னர் குற்றவியல் அல்லது போதைப்பொருள் குற்றச்சாட்டுக்கள் இல்லாத நல்ல குணவியல்புகளையும் சிறந்த சமூக நடத்தைகளையும் கொண்டவர் என கிராம உத்தியோகத்தரின் அறிக்கை ஒன்றும் தாம் வசிக்கும் பிரதேசத்தின் சமாதான நீதிவான் மற்றும் மதகுரு ஒருவரிடமிருந்தும் பெற்றுக் கொண்ட நற்சான்றிதழ்கள் 02ஐ விண்ணப்பதாரரினால் நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கு முன் வைத்தல் வேண்டும். (வீட்டுக் குழந்தைகள், முதியோர்கள் மற்றும் விசேட தேவைகள் உள்ள நபர்களின் பாதுகாப்பு இந்நற்சான்றிதழ்கள் மூலம் எதிர்பார்க்கப்படும்).

vii. ஆட்சேர்ப்புச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் சிறுவர்கள், முதியோர்கள் மற்றும் விசேட தேவைகள் உள்ள நபர்களுடன் கருமங்களை மேற்கொள்வதற்கு பொருத்தமான சிறந்த உடல்நிலை மற்றும் மன ஆரோக்கியமுடையவர் என அரசாங்க வைத்திய உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து பெற்றுக் கொண்ட சான்றிதழ் ஒன்றை விண்ணப்பதாரரினால் நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கு முன்வைத்தல் வேண்டும்.

**06. வயது எல்லை :**

குறைந்த வயதெல்லை : 18 வருடங்கள்;
கூடிய வயதெல்லை : ஏற்புடையதன்று

**07. சம்பள அளவு :**

2025.03.25 ஆந் திகதி இலக்கம் 10/2025 கொண்ட அரசாங்க நிருவாக சுற்றுநிருபத்தின் அட்டவணை 1 இற்கு ஏற்ப இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவு ரூ. 53,060.00 – 10 x 800 – 11 x 1,190 – 10 x 1,320 – 5 x 1,350 - ரூ. 94,100.00 (MN 04 - 2025) ஆகும். உங்களுக்கு அச்சுற்று நிருபத்தின் எற்பாடுகளுக்கமைய அட்டவணை 11 இல் குறிப்பிடப்பட்டவாறு சம்பளம் வழங்கப்படும்.

**08. கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்காக கீழே குறிப்பிடப்பட்ட புள்ளிகள் ஒழுங்கு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.**

I. தகைமை மதிப்பீட்டுப் பரீட்சை :

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்பு* | *ஆகக் கூடிய புள்ளிகளின் அளவு* | *தெரிவு செய்வதற்கு கவனத்திற் கொள்ளப் படும் குறைந்த புள்ளிகளின் அளவு* |
|---|---|---|
| பட்டத்திற்கு மேலதிகமாக பெற்றுக் கொண்டுள்ள கல்வித் தகைமைகள்<br>முதுகலைப் பட்டத்திற்காக 15 புள்ளிகள்<br>டிப்ளோமா பாடநெறிக்காக 2 ½ புள்ளிகள் வீதம் ஆகக் கூடியது 2 டிப்ளோமா பாடநெறி | 20 புள்ளிகள் | 40% |
| உரிய துறை பற்றிய அறிவு, மனப்பாங்கு மற்றும் ஆளுமை, விடயத்திற்குரிய அறிவைப் பரீட்சிப்பதற்காக தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு வினாக்கள் (வாய்மொழிப் பரீட்சை)<br>• சிறுவர்களுடன் கருமங்களை மேற்கொள்வது சம்பந்தமாகவும் நிறுவனத்தின் மனிதவள மற்றும் பௌதீக வளங்களைப் நிர்வகிப்பதற்கும் உரிய முகாமைத்துவ மற்றும் நிர்வாக ஆற்றல்<br>• சட்ட விவகாரங்கள் கட்டளைச் சட்டங்கள் சம்பந்தமாக உள்ள புரிதல்கள் | 25 புள்ளிகள் | |

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்பு* | *ஆகக் கூடிய புள்ளிகளின் அளவு* | *தெரிவு செய்வதற்கு கவனத்திற் கொள்ளப் படும் குறைந்த புள்ளிகளின் அளவு* |
|---|---|---|
| அரசாங்க சேவையில் உள்ள வேளையில் பெற்றுக் கொண்ட பாரட்டுச் சான்றிதழ்கள் (பொது 230 பீ மாதிரிக்கேற்ப இருத்தல் வேண்டும்)<br><br>ஒவ்வொரு சான்றிதழுக்கும் 05 புள்ளிகள் வீதம் ஆகக் கூடியது 04 சான்றிதழ்கள் | 20 புள்ளிகள் | 40% |
| உற்பத்தித்திறன்கள் மற்றும் தலைமைத்துவத் திறமைகள் சம்பந்தமாகப் பெற்றுக் கொண்ட பயிற்சிகளுக்குரிய சான்றிதழ்கள்<br><br>ஒவ்வொரு சான்றிதழுக்கும் 05 புள்ளிகள் வீதம் ஆகக் கூடியது 06 சான்றிதழ்கள் | 30 புள்ளிகள் | |
| நேர்முகப் பரீட்சையின் போது காட்டும் திறன்கள் | 05 புள்ளிகள் | |

- தகைமைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்களினுள் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் போது காட்டும் திறமைகளின் ஒழுங்கு அடிப்படையில் வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.
- ஆட்சேர்ப்புச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் மேலே காட்டப்பட்ட அட்டவணையில் புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைக்காக ஒதுக்கப்பட்ட ஆகக் கூடிய புள்ளிகளின் அளவுகள் உட்பட, தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்காக விரிவான மதிப்பீட்டுப் புள்ளிகள் வழங்கும் நடைமுறை அனுமதிக்கபடுவது நியமன அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.
- மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக் குழு நியமிக்கப்படுவது விடயத்திற்குப் பொறுப்பான மாகாண அமைச்சின் செயலாளரினாலாகும்.

**09. விண்ணப்பதாரரின் ஆளடையாளம் :**

அனைத்து விதத்திலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை முன்வைத்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமே தகைமை மதிப்பீட்டுப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின் போது அனைத்து சான்றிதழ்களின் மூலப் பிரதிகளும் உரிய முறையில் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதித் தொகுதியொன்றும் முன்வைக்கப்படல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது தம்மை அறிமுகப்படுத்திக் கொள்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆளடையாள அட்டைகள் ஏற்றுக் கொள்ளப்படும் :

i. ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளரினால் வழங்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை ;
ii. பாவனையிலுள்ள வெளிநாட்டு கடவுச் சீட்டு
iii. பாவனையிலுள்ள சாரதிக் கடவுச் சீட்டு

**10. விண்ணப்பப்படிவங்களை சமர்பித்தல் :**

(அ) விண்ணப்பப்படிவங்கள் 2026.06.30ந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர்; “செயலாளர், தென் மாகாண விளையாட்டு அமைச்சு, 3 ஆவது மாடி, தக்ஷினபாய, லபுதுவ, காலி” எனும் விலாசத்திற்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) இவ்வறிவிப்பின் இறுதியில் காட்டப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை A4 அளவுள்ள தாளில் தயாரித்து, முதலாம் பக்கத்தில் இலக்கம் 01 தொடக்கம் 06.1 வரையும் இரண்டாம் பக்கத்தில் இலக்கம் 06.2 தொடக்கம் 09 வரையும் II ஆவது பகுதியில் முதலாம் பக்கத்தில் இலக்கம் 01 முதல் 09 வரையும் இரண்டாம் பக்கத்தில் இல 10 மாதிரியாகத் தயார் செய்து தமது கையெழுத்தால் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவம் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் “தென் மாகாண நமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைத் திணைக்களத்தின் இணை உத்தியோகத்தர் சேவைத் தொகுதி (MN4 – 2025) இற்கு உரிய பொறுப்பு உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல்” எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(ஈ) அனைத்து உத்தியோகத்தர்களும் தமது விண்ணப்பப்படிவத்தை தமது நிறுவனத் தலைவர் மூலம் முன் வைக்க வேண்டும்.

(உ) இத்துடன் இருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு பொருத்தமற்ற விண்ணப்பப் படிவங்கள்; நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் காணாமற் போதல் அல்லது தாமதித்தல் போன்ற ஏதேனும் முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**11. பிழையான தகவல்கள் அளித்தல் :**

உங்களால் சமர்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏதேனும் தகவல்கள் உண்மையற்றவை அல்லது தவறானது என்று ஆட்சேர்ப்புக்கு முன்னர் வெளிப்படுத்தப்பட்டால் உங்களின் அபேட்சகர் நிலை நிராகரிக்கப்படும். அவ்வாறான உண்மையற்ற அல்லது தவறான தகவல்கள் ஆட்சேர்ப்புக்குப் பின்னர் வெளிப்படுத்தப்பபட்டால் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

12. வெற்றிடம் நிரப்புவதும் நிரப்பப்படாததுமான உரிமை தென் மாகாண விளையாட்டு அமைச்சுக்குரியதாகும்.

ஐ.எஸ். ஸமரகோன்,
செயலாளர்,
தென் மாகாண விளையாட்டு அமைச்சு.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

தென் மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தில் இணைந்த சேவைகள் தொகுதி (MN4-2025) இற்குரிய பொறுப்பு உத்தியோத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்.

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1. 1.1 உத்தியோகத்தரின் முழுப் பெயர் : ……………………………………………………………………………
1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு. / திருமதி /செல்வி) : ……………………………………………………
1.3 நிரந்தர முகவரி : ………………………………………………………………………………………………
1.4 ஆரம்ப நியமனத் திகதி : ………………………………………………………………………………………
1.5 சேவை நிரந்தரமாக்கப்பட்ட திகதி : ………………………………………………………………………

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ……………………………………..

2.1 பிறந்த திகதி :
வருடம் : ……… மாதம் : ………… திகதி : …………..

2.2 விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :
வருடம் : …………… மாதம் : ………………… திகதி : ………………

3. 3.1 தற்போதைய பதவி : ……………………………………………………………………………
3.2 சேவை நிலையம் : ……………………………………………………………………………
3.3 கடமை முகவரி : ……………………………………………………………………………
3.4 தொலைபேசி இல. : அலுவலகம் : ………………………………… கைடயக்கம் : …………………………

4. 4.1 பால் (ஆண்/ பெண்) (ஆண் - M , பெண் - F ) : ☐

4.2 விவாகமானவர் / விகாகமாகாதவர் பற்றியது : ………………

5. கல்வித் தகைமைகள் : (உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகள் இணைத்தல் வேண்டும்)

| *நிறுவனம்* | *கால எல்லை* | *பட்டம்/டிப்ளோமா* | *வகுப்புச் சித்தி இருப்பின்* | *வருடம்* |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

6. 6.1 க.பொ.த. (உ/த) பரீட்சை பற்றிய விபரம் :

i. பரீட்சை நடைபெற்ற வருடமும் மாதமும் : ……………………………………………………………………………………

ii. பரீட்சைச் சுட்டெண் : ……………………………………………………………………………………………………

iii. சித்தியடைந்த பாடங்கள் :

| *பாடம்* | *தரம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

6.2 க.பொ.த. (சா/த) பரீட்சை பற்றிய விபரம் :

i. பரீட்சை நடைபெற்ற வருடமும் மாதமும் : ………………….

ii. பரீட்சைச் சுட்டெண் : ………………………………………….

iii. சித்தியடைந்த பாடங்கள் :

| *பாடம்* | *தரம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

7. நீங்கள் எப்போதாவது எந்தவொரு குற்றமொன்றுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளி ஆக்கப்பட்டுள்ளீரா? ஆம் / இல்லை
ஆம், எனின் விபரிக்கவும்.

…………………………………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………………………………
…………………………………………………………………………

8. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் நான் அறிந்த வகையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இவ்வெளிப்படுத்தல் உண்மைக்குப் புறம்பானது என நிரூபிக்கப்படுமாயின், சேவையில் இணைத்துக் கொள்வதற்கு தகுதியற்றவனாவேன் என்பதையும், நியமிக்கப்பட்ட பின்னர் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) இங்கே குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவல்களையும் பின்னர் மாற்றம் செய்ய மாட்டேன்.

………………………….. ………………………………

திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

9. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்பிக்கும் ………………………………….. என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும், அவர் ……..…………….…… ஆந் திகதி என் முன்னிலையில் மேலே 8 ஆம் பந்தியின் கீழ் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி : ……………………………………………………….……
உறுதிப்படுத்துபவரின் பெயர் : ……………………………………………………..…
பதவி : ……………………………………………………………
விலாசம் : ……………………………………………………………
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)

## பகுதி II

(தென் மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைக் திணைக்களத்தில் இணைந்த சேவைத் தொகுதிக்கு (MN4) 2025 உரிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக சுயவிபரக் கோவைக்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும்).

1. சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ளதா : ………………………………………………………………………………
2. சேவை நிரந்தரமாக்கப்பட்ட திகதி : ……………………………………..……………………………………
3. 2026.06.30 ஆந் திகதிக்கு சேவைக் காலம் : ……………………………………..……………………………………
4. பெற்றுக் கொண்டுள்ள பாராட்டு விமர்சனமும் குற்றத் தவறுகளும் பற்றிய விபரங்கள் : (இருப்பின் அது பற்றிய விபரங்களை உள்ளடக்கவும். அதில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்து அனுப்பவும்)

5. கடந்த 05 வருடங்களினுள் செயல்திறன்கள் :

| வருடம் | செயல்திறன் மட்டம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

6. ஆரம்ப நியமனத் திகதியிலிருந்து 2026.06.30 ஆந் திகதி வரை எடுத்துள்ள சம்பளமற்ற லீவுகள் பற்றிய விபரம் :

| திகதி தொடக்கம் | திகதி வரை | வருடம் | மாதம் | திகதி |
|---|---|---|---|---|
| ……………………. | ………………… | …… .. | ……… | …… |

7. சேவைக் காலத்தினுள் ஒழுக்காற்று தண்டனைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளீரா? (விபரங்களை எழுதவும்) :

8. இது வரையில் செயற்படுத்தப்படுகின்ற அல்லது பின்னால் செயற்படுத்துவதற்குரிய ஆரம்பகட்ட விசாரணைகள், ஒழுக்கமுறை விசாரணைகள் அல்லது கணக்காய்வு விசாரணைகள் உள்ளதா? (அது பற்றிய விபரங்களை உட்படுத்தவும்).

9. திரு. / திருமதி / செல்வி ……………………………………. அவர்களின் தனிநபர்க் கோவையின் நடைமுறையிலுள்ள ஆவணங்களுக்கேற்ப மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் என்னால் தனிப்பட்ட முறையில் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : …………………

………………………………………..
விடய உத்தியோகத்தரின் கையொப்பம்

விடய உத்தியோகத்தரின் பெயர் : ……………………………………………………………………………………

விடய உத்தியோகத்தரின் பதவி : ……………………………………………………………………………………

10. திணைக்களத் தலைவரின் அத்தாட்சி (அரசாங்க மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

10.1 உத்தியோகத்தரின் தனிநபர் கோவையின் பிரகாரம், விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று அண்மித்த ஐந்து (05) வருடங்களுக்குள் வேலை, நடத்தை, வரவு என்பன திருப்திகரமானது / திருப்திகரமற்றது.

சகல சம்பளப்படி உயர்வுகளையும் பெற்றுள்ளார் / பெறவில்லை.

ஏதேனும் ஒரு வகையில் ஒழுக்காற்று தண்டனைக்கு உட்படவில்லை / உட்பட்டுள்ளார்.

10.2 விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவு செய்யப்படின், தற்போது வகிக்கும் பதவியிலிருந்து இவ்வுத்தியோகத்தரை விடுவிக்க முடியும் / விடுவிக்க முடியாது. விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்துகின்றேன் / உறுதிப்படுத்தவில்லை.

……………………… ………………………………………

திகதி திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்

05 - 439

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.